## இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம்

### 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

**கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) முற்றாகப் பெறுமானத் தேய்விடப்பட்ட சொத்துக்கள், பாவனைக்குப் பயன்படுத்தப்படாத சொத்துக்கள், பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட சொத்துக்கள் என்பன வெவ்வேறாக இனங்காணப்படாது ரூபா 32,530,066 மீளாய்வாண்டிற்கான தேய்மானச் செலவினமாக இனங்காணப்பட்டிருந்தது.

(ஆ) ஒவ்வொரு ஹோட்டல் கிளைக்கும் வெவ்வேறு வருமான கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தபோதும், தலைமை அலுவலகச் செலவினம் ஹோட்டல் பாடசாலைகளுக்குப் பகிர்வு செய்யப்படும் கணக்கீட்டுக் கொள்கை நிதிசார் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. இதற்குப் புறம்பாக, சமுத்திரா ஹோட்டலுக்கு நேரடி மற்றும் சுழற்சி மேந்தலைகள் பகிர்வு செய்யப்படும் கணக்கீட்டுக் கொள்கையும் நிதிசார் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

### 1.2.2 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வர்த்தகக் கடன்பட்டோரில் ரூபா 9,555,378 ஓராண்டிற்கு மேலாக நிலுவையையாக உள்ளது. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து பெற வேண்டிய ரூபா 5,092,956 ஓராண்டுக்கு மேலாக நிலுவையாக உள்ளது.

(ஆ) நானாவித கடன்கொடுத்தோரில் ரூபா 3,934,242 க்கான உண்மையான பொறுப்பை இனங்காணப்படாமையின் காரணமாக 2007 ஆம் ஆண்டு தொடக்கம் அது தீர்த்து வைக்கப்படாதிருந்தது.

(இ) பதவியணியினருக்கு வழங்கப்பட்ட ரூபா 404,851 முற்பணமானது மீளாய்வாண்டு முடிவிலும் தீர்த்து வைக்கப்படாதிருந்தது.

### 1.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் கணக்கீட்டு விடயங்களுக்கெதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| விபரம் | பெறுமதி<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| கடன்பட்டோர் | 14,581,616 | மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதம் |
| சிற்றுண்டிச்சாலை விற்பனை | 4,593,426 | விற்பனை ஆவணங்கள் |
| சொத்து பொறித் தொகுதி, உபகரணம் என்பன | 572,308,458 | i. பௌதீக, சரி பிழை பார்த்தல் அறிக்கை<br>ii. நிலையான சொத்துப் பதிவேடு |
| விற்பனைக் கிரயம் (சமுத்திரா ஹோட்டல்) | 6,987,145 | கையிருப்புச் சீராக்கல் விபரம் |
| பெற வேண்டிய வைப்பு | 2,234,312 | மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதம் |
| ஏனைய பெறவேண்டிய வைப்பு மீதிகள் | 1,503,002 | மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதம் |
| இலங்கை சுற்றுலா அதிகார சபையிடமிருந்து பெற வேண்டிய மீதி | 61,337,343 | மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதம் |

| | | |
|---|---|---|
| இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகத்திடமிருந்து பெற வேண்டிய மீதி | 4,417,949 | மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதம் |
| இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்குக் கொடுப்பனவு செய்ய வேண்டிய மீதி | 6,657,304 | மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதம் |

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்பட்ட இணங்காமை அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானம் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டம் பிரிவு 14(10) | நிறுவகத்தின் மிளாய்வாண்டிற்கான செயற்திறனைக் காட்டும் வரைவு வருடாந்த அறிக்கை தயாரிக்கப்படவில்லை. |
| (ஆ) 2003 ஜூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) பிரிவு 4.2.2 | மாதாந்த செயற்திறன் அறிக்கை, செயற்பாட்டு அறிக்கை, கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களது பெறுமதி, மனிதவள அறிக்கை, கட்ன்பட்டோர், கடன்கொடுத்தோர் மற்றும் கையிருப்புக் காலப் பகுப்பாய்வு, சலனமற்ற, மெதுவாக நகரும், பயன்படுத்தப்படாத கையிருப்பு ஆகியவை தொடர்பான அறிக்கைகள் நிர்வாகச் சபைக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ii) பிரிவு 9.12 | ஊழியர்களுக்கான மருத்துவக் காப்புறுதித் திட்டத்திற்குப் பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படவில்லை |
| (iii) பிரிவு 9.14.1 | மனிதவள முகாமைத்துவத்துக்குரிய விதிகள், பிரமாணங்கள் என்பவற்றை உள்ளடக்கிய மனிதவள முகாமைத்துவம் தொடர்பான அத்தியாயத்தைக் கொண்ட நடைமுறைக் கோவை ஒன்று திறைசேரிச் செயலாளரது இசைவுடன் |

| | | |
|---|---|---|
| | | தயாரிக்கப்படவில்லை. |
| (இ) | தேசிய கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.1(அ) மற்றும் (இ) வழிகாட்டல்கள் | குறைந்தது மூன்று ஆண்டுகளேனும் உள்ளடங்குமாறு எதிர் வரும் ஆண்டுகளுக்கான விரிவான கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. |
| (ஈ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/2 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை | நிறுவகத்திற்குச் சொந்தமான கணனிகள், கணனித் துணைப்பாகங்கள், மென் அணி என்பன தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்படவில்லை. |

### 1.2.5 அதிகாரத் துணையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

வாகன ஒதுக்கீட்டு வசதிக்கு உரித்தற்ற 3 உத்தியோகத்தர்களுக்கு 2010 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு முடிவுவரை போக்குவரத்து மற்றும் எரிபொருள் படியாக அமைச்சரவையின் அங்கீகாரமின்றி ரூபா 3,551,640 வழங்கப்பட்டிருந்தது.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிறுவக நடவடிக்கைகளால் விளைந்த மிகை ரூபா 53,580,403 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 55,649,410 ஆகும். இதனால் நிதிசார் விளைவுகளில் ஏற்பட்ட குறைவு ரூபா 2,069,007 ஆகும். முன்னைய ஆண்டை விட செலவினம் ரூபா 31,411,357 அதிகரித்தமையே நிதிசார் விளைவுகளில் குறைவு ஏற்படக் காரணமாயிற்று.

### 2.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

மீளாய்வாண்டில் நிறுவகத்தினது வருமானம் 294 மில்லியன் ஆகவிருந்தது. முன்னைய ஆண்டின் ரூபா 265 உடன் ஒப்பிடுகையில் அது 10.9 சதவீத அதிகரிப்பைக் காட்டுகின்றது. அவ்வாறே, முன்னைய ஆண்டின் கற்கை, பயிற்சி, அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குச் செலவான ரூபா 209 மில்லியன் உடன் ஒப்பிடுகையில்

மிளாய்வாண்டின் செலவினம் ரூபா 241 ஆகவிருந்ததால் அதிகரிப்பு 14.8 சதவீதமாகியது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 ஹோட்டல் பாடசாலைகளது செயற்திறன்

மாணாக்கர்களைப் பயிற்றுவிப்பது (உள்ளக) தொடர்பான செயற்திறனை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2012 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மொத்த மாணாக்கர்களது எண்ணிக்கையில் கற்கை நெறிகளைப் பூர்த்திசெய்த மாணாக்கர்களது எண்ணிக்கை 94 சதவீதத்தைக் குறிக்கும் 551 ஆகும். 2011 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மாணாக்கரது எண்ணிக்கையில் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த மாணாக்கர்களது எண்ணிக்கை 96 சதவீதமாகும்.

(ஆ) மீளாய்வாண்டினது மாணாக்கர் ஒருவருக்கான கிரயம் ரூபா 437,005 ஆகும். முன்னைய ஆண்டில் அது ரூபா 147,242 ஆகவிருந்தது.

(இ) இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் ஒன்றிணைந்த திட்டத்தின் பிரகாரம், தற்போதைய சுற்றுலாப் பயணிகளது 1.005 மில்லியன் வருகையுடன் ஒப்பிடும்போது 2016 ஆம் ஆண்டளவில் சுற்றுலாப் பயணிகளது வருகை 2.5 மில்லியனாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எவ்வாறாயினும், மேற்படி இலக்குடன் ஒருசேர இத்துறையின் ஒட்டுமொத்த இலக்கை எய்துவதற்குத் தேவையான மனிதவளத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் உத்திகளைத் தயார்படுத்தவில்லை.

### 3.2 நிதியப் பயன்பாடு

நலிவுற்ற நிதிசார் முகாமைத்துவம் காரணமாக ரூபா 99 முதல் ரூபா 134 மில்லியன் வரையிலான மீதி மீளாய்வாண்டு பூராவும் பயனற்றிருந்தது.

### 3.3 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

சுற்றுலா வளங்களை முன்னேற்றுவற்கான செயற்திட்டத்தின் கீழ் 2008 ஜனவரியில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 11,929,385 பெறுமதியான ஹோட்டல் உபகரணங்கள் மீளாய்வாண்டு முடிவிலும் பயனற்றவாறிருந்தன.

### 3.4 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

சாத்தியக் கூறு அறிக்கைகள் தயாரிக்கப்படாமலும் கிரய மதிப்பீடின்றியும் கேள்வி நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படாதும் சமுத்திரா ஹோட்டலின் அறைகள் நவீனமயமாக்கப்பட்டிருந்தன. தனியார் நிறுவனம் ஒன்று சமர்ப்பித்த ரூபா 51 மில்லியன் கூறு விலையின் அடிப்படையில் நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. பூர்த்தியடைந்த நிர்மாண வேலைகள் நியம முறைகளுக்கு அமைவாக இருக்கவில்லை.

### 3.5 முகாமைத்துவத் தகவல் முறைமையினது குண நலன்களும் நம்பகத் தன்மையும்

மீளாய்வாண்டின்போதும் முன்னைய இரு ஆண்டுகளிலும் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 30 மில்லியனுக்கான கணனி மற்றும் மென்பொருட்களின் கொள்வனவுக்காக செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், நிறுவகத்தின் முகாமைத்துவத் தகவல்களுக்கான தேவைகள் இனங்காணப்பட்டு முறையான தகவல் முறைமையொன்று மீளாய்வாண்டு முடிவிலும் நிறுவப்படவில்லை.

### 3.6 மனிதவள முகாமைத்துவம்

சமுத்திரா ஹோட்டல் பதவியணியினரை உள்ளடக்கிய மீளாய்வாண்டின் நிறுவகத்தினது கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியினரது எண்ணிக்கை 117 ஆகும். 6 விரிவுரையாளர்களையும் உள்ளடக்கியவாறான வெற்றிட எண்ணிக்கை 48 ஆகும். வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 3.7 போக்குவரத்துக் குழாம்

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் 2 வாகனங்களுக்கு எரிபொருள், பராமரிப்பு, பழுதுபார்த்தல் என ரூபா 4,142,205 செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அவ் வாகனங்கள் பயணஞ் செய்த தூரத்தினது விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின்போது வாடகை அடிப்படையில் பயன்படுத்தப்பட்ட வாகனங்களுக்கு ரூபா 10,532,634 செலவிடப்பட்டிருந்தது. மேலும், வாடகைக்குப் பெறப்பட்ட வாகனங்களது பயணத் தூரம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 4. கணக்களி தகைமையும் சிறந்த ஆளுமையும்

### 4.1 ஒன்றிணைந்த திட்டம்

2011 முதல் 2016 வரையான ஒன்றிணைந்த திட்டத்தை நிறுவகம் தயாரித்திருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டு தொடர்பான மனிதவலு அபிவிருத்தி, உற்பத்தி அபிவிருத்தி மற்றும் சந்தைப்படுத்தல் உத்திகள் என்பன வருடாந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் நடைமுறைப்படுத்தபடவில்லை.

### 4.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்கெனத் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

நிறுவகத்தில் கணக்காய்வுக் கூறு ஒன்று நிறுவப்படவில்லை.

### 4.4 வரவு, செலவுத்திட்டக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டினது வரவு,செலவுத்திட்டமிடப்பட்ட வருமான, செலவினங்கள் என்பன உள்ளவாறான வருமான, செலவினங்களுடன் ஒப்பிடப்படுகையில் 28 செலவின விடயங்களில் 52 முதல் 981 சதவீதம் வரையிலான வேறுபாடுகள் அமைந்திருந்தன. இதற்கமைய, வரவு, செலவுத்திட்டம் ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) பயிற்சிக்கான நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தல்
(ஆ) வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு
(இ) மனித வள முகாமைத்துவம்
(ஈ) சொத்து முகாமைத்துவம்
(உ) கொள்வனவு
(ஊ) முற்பணக் கொடுப்பனவு
(எ) கணக்கீடு